## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2015

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணக்கம்**

**எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்:-** முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 4,633,615 கிரயத்தில் பல்கலைக்கழகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் இந்த நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் அவற்றின் பாவனைக் காலத்தை மீளாய்வுசெய்து மாற்றங்களை கணக்கீடு செய்யாமல் பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தப்படுகின்றன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 28,300 பெறுமதியான களஞ்சியப் பொருட்கள் மீளாய்வாண்டு வரையிலும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாய பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்கான மதியுரையாளரிற்கு செலுத்தப்பட்ட ரூபா 5,025,466 தொகை நிதிக்கூற்றுக்களில் கட்டிடக் கணக்கிற்கு தாக்கல்செய்வதற்குப் பதிலாக மதியுரைச் சேவையாக தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 தொங்கல் கணக்கு**

2012 இலிருந்து தொங்கல் கணக்கிலுள்ள ரூபா 333,885 ஆன மீதியானது தெளிவாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் காட்டப்பட்டிருந்தது. சபையின் அங்கீகாரத்துடன் மிகக் குறுகிய காலத்தில் இந்த விடயத்தை சரிசெய்வதற்கு 2014 ஆகஸ்ட் 22 இல் நடைபெற்ற கோப் (COPE) கூட்டத்தில் உப வேந்தர் உடன்பட்டிருந்த போதிலும் 2016 செப்தெம்பர் 30 வரையிலும் இது தொடர்பில் உரிய அதிகாரிகளால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏழு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருந்த ரூபா 84,240 பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் ஐயக் கடனுக்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 981,957 தொகையான முற்பணங்கள் ஏழு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இந்த முற்பணங்களை அறவிடுவதற்கு இன்னமும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தோண்டப்பட்ட கிணறு நீர்ப் பம்பி இல்ல நீர்த் தாங்கியின் நிர்மாணங்கள், மருத்துவ பீடத்திற்கான கலையரங்கம் மற்றும் கலைப்பீடத்திற்கான (கைலாசபதி கலையரங்கம்) நுழைவாயில் கட்டமைப்பின் மாற்றம், வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான கட்டம் III, வணிகக் கற்கைகள் பீடம், வவுனியா வளாகத்தின் சிற்றூண்டிச்சாலை நிர்மாணம் மற்றும் வவுனியாவிலுள்ள பல்நோக்கு விளையாட்டுத் தொகுதி போன்ற பல்வேறு செயற்திட்ட வேலைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 41,157,244 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2015 இலிருந்து கட்டிடத் திணைக்களத்தால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புத்தகங்கள் மற்றும் பருவகால வெளியீடுகளின் வழங்கல்கள் மற்றும் வெவ்வேறு நோக்கங்களிற்காக 2010 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியின் போது செலுத்தப்பட்ட ரூபா 5,830,953 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2016 யூலை 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) புனரமைப்பு வேலைகளிற்காக 1999 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியின் போது கட்டிடத் திணைக்களத்திற்கு இருபத்தியிரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 735,501 கூட்டுமொத்தமான பல்வேறு முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. வேலைகள் பூரணப்படுத்தப்படாதிருந்த போதிலும் 2016 செப்தெம்பர் வரை பல்கலைக்கழகத்திற்கு கட்டிடத் திணைக்களத்தால் இந்த முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பெறப்பட்ட நன்கொடைகள், வாகன விபத்துக்கள் மற்றும் ஏற்பட்ட சேதங்கள் காரணமாக விளைந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள், ஆராய்ச்சிப் படிகள், விடுதி வாடகை வருமானம் மற்றும் தீர்க்கப்படாத முற்பணங்கள் போன்ற கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்களை கீழே தரப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக உறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

- வெளிநாடுகள்/ தூதரகங்களிலிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் தொடர்பான விரிவான பட்டோலைகள்

- பல்கலைக்கழக ஆளுநர் சபை, நிதிக் குழு, பீடங்கள் மற்றும் நூலகம் என்பவற்றின் கூட்டக் குறிப்புக்கள்

- கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்

- கல்விசார் பதவியணியினரால் பூர்த்திசெய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் விபரங்கள்

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| **(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களிற்கான தாபனவிதிக் கோவை** | |
| (i) IX ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவு | மேலதிக நேரம் தொடர்பான நேரங்களை பதிவுசெய்வதற்கு தனியான பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதும் அத்தகைய பதிவேடொன்று வவுனியா வளாகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) X ஆம் அத்தியாயத்தின் 20.6 ஆம் பிரிவு | அனைத்து சம்பளமற்ற விடுமுறைகளும் பொது 96 படிவத்தில் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) XXII ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | ரூபா 1,572,450 மோசடி கொடுப்பனவுகளிற்காக பொறுப்புடைய நபரிற்கு ஒழுக்காற்று விசாரணை நடாத்துதல் மற்றும் குற்றப் பத்திரிகைகளை வழங்குதல் தொடர்பான நடவடிக்கை இரண்டு ஆண்டுகள் மற்றும் எட்டு மாதங்கள் கடந்த பின்னரும் கூட பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உரிய அலுவலரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கான நிதி அதிகாரம் உயர் கல்வி அமைச்சின் செயலாளரிடம் விடப்பட்டுள்ளதென உப வேந்தர் இது தொடர்பில் குறிப்பிட்டிருந்தார். |
| (iv) XXVI ஆம் அத்தியாயத்தின் 2, 3 மற்றும் 4 ஆம் பிரிவு | உயர் கல்வி நிறுவகங்களுக்குச் சொந்தமான அனைத்துப் பொருட்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 26,388,415 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) XXVII ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | வருகைப் பதிவேட்டில் சரியான நேரத்திற்கு சிவப்பு கோட்டினை வரையுமாறு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு கோப் (COPE) ஆல் நெறிப்படுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் நெறிப்படுத்தலானது இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) திறைசேரிச் சுற்றறிக்கைகள்**

2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கம்

பல்கலைக்கழகத்தின் கணனிகள் மற்றும் கணனி உபபாகங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள்**

(i) 2014 ஏப்ரல் 24 ஆம் திகதிய 02/2004 ஆம் இலக்கம்

மீளாய்வாண்டின் போது கூட்டங்களில் பங்குபற்றியதற்கு ரூபா 560,000 தொகையானது உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்படாமல் சபை அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2010 பெப்ரவரி 15 இன் 02/2010 ஆம் இலக்கம்

ரூபா 62,219,455 தொகை மீளாய்வாண்டின் போது வவுனியா வளாகத்தின் 138 கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களை கைவிரல் அடையாள இயந்திரங்களினூடாக உறுதிப்படுத்தாது செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்**

(i) 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்கம்

வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஆகக்குறைந்தது ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த 17 வாகனங்கள் தொடர்பில் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 மே 20 இன் 11/2015 ஆம் இலக்கம்

பல்கலைக்கழக பதவியணி அங்கத்தவர்கள் முறையான சீருடையின்றி அலுவலகத்திற்கு சமூகமளித்திருந்தனர்.

**(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்**

(i) நிதிப் பிரமாணம் 136 (6)

அதிகாரமளிக்கப்பட்ட நபருடைய பதிவேடுகள் அவற்றை சான்றுபடுத்தும் உத்தியோகத்தருடன் ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை ஒப்பீடு செய்யப்பட்டு இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 140 (3)

ரூபா 1,572,450 கூட்டுத்தொகையான ஆறு மோசடிக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன்னர் காசாளர் அவருடைய விசேட அறிவிற்குட்பட்டுள்ள ஏதாவது உண்மைச் சம்பவங்களை தேடுவதற்கும் முறையாக நடவடிக்கை எடுப்பதற்கும் தவறியிருந்தார்.

(iii) நிதிப் பிரமாணம் 272 (1)

செலுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அவை சம்பந்தப்பட்ட மாதத்தின் முடிவிலிருந்து குறைந்தது ஆறு கிழமைகளிற்கு மேற்படாமல் மாதாந்தம் கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப் பிரமாணம் 1645

வாகனங்களிற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அடுத்துவரும் மாதத்தின்

15 ஆந் திகதிக்கு முன்னர் உரிய நிறுவனத்தின் தலைவர் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒவ்வொரு மாதத்திற்குமான ஒவ்வொரு வாகனத்தினதும் ஓடிய பிரயாணத்தின் மாதந்தப் பொழிப்பையும் நாளாந்த ஓட்ட அட்டவணைகளையும் சமர்ப்பித்திருக்கவில்லை. எனினும், 2016 மே 06 இலேயே நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 124,793,315 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 141,526,367 ஆன பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 16,733,052 ஆன மேலுமொரு பின்னடைவினை சுட்டிக்காட்டுகின்றது. ஆளணி வேதனங்கள், பராமரிப்புச் செலவினங்கள், ஒப்பந்த சேவைகள் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களின் அதிகரிப்பு இந்த பின்னடைவுக்குப் பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் ரூபா 141,526,367 பற்றாக்குறையை விளைவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நாட்டிற்கான பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு ரூபா 1,645,286,670 ஆக இருந்தது. ஆகையால், மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி சேர்க்கை ரூபா 1,503,760,303 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியிலும் முன்னைய நான்கு ஆண்டுகளிலுமுள்ள பெறுமதி சேர்க்கையின் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **விபரம்** | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| ஆண்டிற்கான பற்றாக்குறை | (141,526,367) | (124,793,315) | (119,128,668) | (100,783,982) | (60,290,341) |
| கூட்டு: | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 1,379,464,219 | 1,054,344,200 | 885,523,611 | 724,336,180 | 637,669,183 |
| அரசாங்கத்திற்குச் செலுத்திய வரிகள் | | | | | |
| - சுங்க வரி | 132,569 | 220,641 | 437,504 | 46,704 | - |
| - பெறுமதி சேர் வரிகள் (வற்) | 68,249,939 | 59,818,383 | 25,818,383 | 10,940,557 | 2,923,767 |
| - துறைமுக அதிகாரசபை தீர்வை | - | 396,526 | 673,318 | 192,121 | - |
| - வீதமும் வரிகளும் | 1,624,121 | 1,663,868 | 1,189,326 | 905,219 | 844,689 |
| பெறுமானத்தேய்வு | 195,815,822 | 156,616,277 | 115,530,639 | 93,580,287 | 67,246,092 |
| **மொத்தப் பங்களிப்பு** | 1,645,286,670 | 1,273,059,895 | 1,029,172,781 | 830,001,068 | 708,683,731 |
| **பெறுமதிச் சேர்க்கை** | 1,503,760,303 | 1,148,266,580 | 910,044,113 | 729,217,086 | 648,393,390 |

மீளாய்வாண்டின் போது ரூபா 325,120,019 மற்றும் ரூபா 39,199,545 ஆல் முறையே ஆளணி வேதனங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன அதிகரித்தமை மீளாய்வாண்டிற்கான

பெறுமதிச் சேர்க்கையில் ரூபா 355,493,723 ஆன முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

#### (அ) பரீட்சைப் பெறுபேறுகள்

1995 யூலை 14 இன் 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம், பரீட்சை நடைபெற்ற பின்னர் மூன்று மாதங்களிற்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்களின் கீழ் நடாத்தப்பட்ட பல்வேறு பாடநெறிகளிற்கான பரீட்சைகள் நடைபெறுவதற்கான திகதிகள் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இலக்கிடப்பட்ட திகதிகள் என்பன நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது விவசாய, கலைகள், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக, விஞ்ஞான பீடங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு என்பவற்றால் பரீட்சைப் பெறுபேறுகளைை விடுவிப்பதில் 04 மாதங்கள் தொடக்கம் 07 மாதங்கள் வரையிலான வீச்சில் கருத்திற்கொள்ளக்கூடிய காலதாமதங்கள் இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. ஆதலால், மாணவர்கள் உரிய நேரத்தில் அவர்களுடைய வேலைவாய்பிற்கான சந்தர்ப்பங்களை பெறுவதற்கு பின்தங்கியிருந்தனர். இந்த விடயம் என்னுடைய முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பெபேறுகளை வெளியிடுவதற்கு உரிய அதிகாரிகளால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) மாணவரொருவருக்கான கிரயம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளிற்காக பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் மாணவரொருவருக்கான கிரயம் என்பன கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா.) | 1,258,378,949 | 988,640,662 | 815,147,732 | 644,212,414 |
| மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 8,307 | 8,308 | 5,723 | 5,896 |
| மாணவரொருவருக்கான கிரயம் (ரூபா.) | 151,484 | 118,999 | 142,433 | 109,262 |

பல்கலைக்கழகத்திலுள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை இந்த இரண்டு ஆண்டுகளில் அண்ணளவாக சமனாக காணப்படுகின்ற போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் ரூபா 32,485 ஆல் அல்லது 27.29 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

#### (இ) ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் ஆராய்ச்சிப் படிகளின் கொடுப்பனவுகள்

மீளாய்வாண்டின் போது ரூபா 8,895,019 மற்றும் ரூபா 62,845,674 தொகையான முறையே ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் ஆராய்ச்சிப் படிகள்

செலுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆராய்ச்சி அறிக்கைகள் சமர்ப்பித்திருக்காத அலுவலர்களுக்கு மானியங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன.

(ii) ஆராய்ச்சி அறிக்கைகளின் சமர்ப்பிப்பிற்கான வேலைத் திட்டங்கள் மற்றும் பட்டோலைகள் அலுவலர்களால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆராய்ச்சி மானியங்கள் ஆராய்ச்சியாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆராய்ச்சிப் படிகள் மீதான கண்காணிப்பு முறைமை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டு திறமையீனங்கள்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகமானது யாழ்ப்பாணத்தில் சொந்தமாக வைத்திருந்த விருந்தினர் விடுதி திருத்தத்தின் கீழுள்ள போதிலும் விருந்தினர் விடுதியின் திருத்த வேலைகளை பூர்த்திசெய்வதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் பல்கலைக்கழகத்திற்கு வருகைதருகின்ற உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 754,327 தொகையை பல்கலைக்கழகம் செலவிட்டிருந்தது.

(ஆ) இருக்கின்ற நேரடி தொலைபேசி இணைப்பின் பயன்பாட்டினை குறைப்பதன் மூலம் அலுவலக தொலைபேசிக் கட்டணங்களை குறைக்கும் நோக்கில் 2011 சனவரியில் பல்கலைக்கழகத்தில் உள்ளக தொலைபேசி வசதிகள் நிறுவப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், வெளிச் செல்லல் தொலைபேசி அழைப்புக்கள் மீதான கட்டுப்பாடின்மையால் ஒரே நேரத்தில் உள்ளக இணைப்புக்கள் ஊடாக வெளிச்செல்லும் தொலைபேசி அழைப்புக்களும் வழங்கப்பட்டிருந்தமை காரணமாக முன்னைய ஆண்டிற்கான கட்டணங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான தொலைத்தொடர்புக் கட்டணங்கள் ரூபா 5,098,617 ஆல் அல்லது 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

**4.3 முகாமைத்துவ திறமையீனங்கள்**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைப்பரிசிலில் சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் எண்பத்தொரு விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்கள் பூர்த்தியடைந்த பின்னர் கடமைக்காக அறிக்கையிட்டிருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச் சென்றிருந்தனர். எவ்வாறாயினும், பல்கலைக்கழகம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 82,840,601 கூட்டுத்தொகையான பிணைமுறியினை உடன்படிக்கைகளை மீறியமைக்காக 86 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 3,150,000 கிரயத்தில் வெளியில் வழங்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் தயாரிப்பிற்கான ஒப்பந்த உடன்படிக்கையொன்று 2013 நவம்பர் 18 இல் கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்த வேலைகள் 2016 செப்தெம்பர் 30 வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2016 யூலை 31 இற்கு முன்னர் ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் நோக்கெல்லை மற்றும் கிரய முரணின்

மாற்றங்கள் காரணமாக 04 தடவைகள் பூர்த்தியாக்கல் காலப்பகுதி மீளாய்வுசெய்யப்பட்டிருந்தது.

(இ) வெவ்வேறு வகை செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 31,440,494 தொகை குறித்த நோக்கங்களிற்காக முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு பணத்தை மாற்றாமல் 10 ஆண்டுகளிற்கு மேலாக செலவிடப்படாத மீதிகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) சுய நிதியிடல் கற்கைநெறிகளிலிருந்து உழைத்த ரூபா 4,360,233 ஆன செலவிடப்படாத மீதிகள் முறையான கணக்கிற்கு மாற்றப்பட்டு பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2004 ஆம் ஆண்டின் போது இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 163,653 தொகை 2016 செப்தெம்பர் 30 வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு தீர்ப்பனவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் இலங்கை மின்சார சபையிடமிருந்து முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முற்பணங்கள் மீது முறையான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கொடுப்பனவுகளின் ஆகக்கூடிய எல்லைக்கு மதிப்பீடுகள் மேற்கொள்ளாமல் பல்வேறு உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும், உத்தியோகத்தர்களால் அந்த முற்பணங்களைத் தீர்ப்பனவுசெய்யும் போது குறிப்பிடத்தக்களவு காலதாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(எ) பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான வாகனங்கள் நீண்ட பிரயாணங்கள் பூர்த்தியடைந்த பின்னர் இளைப்பாறுவதற்கு சாரதிகள் அனுமதிக்கப்படாமை காரணமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகியிருந்தன. இந்த விடயம் உப வேந்தரிற்கு சாரதிகளால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தால் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ரூபா 1,244,382 பல்கலைக்கழக சேமலாப நிதியம் பல வருடங்களாக பல்கலைக்கழக உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் உத்தியோகத்தர்களின் சேமலாப நிதியத்தை மீளச்செலுத்துவதற்கு முகாமைத்துவத்தால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) உடற்கல்வி டிப்ளோமா, ஊடகத்துறை டிப்ளோமா, வியாபார நிர்வாக முதுமானி, தமிழில் முதுகலைமானி, சைவ சித்தாந்தத்தில் முதுகலைமானி, சுற்றாடல் முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமானி, சுகாதார முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமானி, இரண்டாம் மொழியாக ஆங்கிலம் படிப்பித்தலில் பட்டப்பின் படிப்பு என்பன தொடர்பாக சுய நிதியிடல் கற்கைநெறிகளை நடாத்துவதில் ரூபா 4,915,577 நட்டம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் பல்கலைக்கழகமானது நடாத்திய ஒவ்வொரு கற்கைநெறியினதும் ஆகக்குறைந்த கிரயத்தை மேவுகை செய்வதற்கான பணத்தை உழைப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

## 4.4 நூலக நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூலகங்களிலிருந்து புத்தகங்களை பெற்றிருந்த பதினேழு கல்விசார் உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களால் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முப்பத்தியொரு புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த புத்தகங்களை மீளப்பெறுவதற்கு இது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பல்கலைக்கழகத்தால் காலதாமதத்திற்கான தண்டப்பணம்

விதிக்கப்படாமையின் காரணமாக ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதிகளாக புத்தகங்கள் நிலுவையாகவிருந்தன.

(ஆ) 2015 இல் கொள்வனவுசெய்யப்பட்ட ரூபா 136,535 மற்றும் ஐ.அ.டொலர் 15,102 பெறுமதியான பருவ வெளியீடுகள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பருவ வெளியீடுகளின் வழங்கல் மீதான மந்தமான கட்டுப்பாடு காரணமாக பெறப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பருவ வெளியீடுகளை வழங்காததன் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,572,450 கூட்டுத்தொகையான இருபது கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் ஊடாக 2012 தொடக்கம் 2013 மார்ச் வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் போன்ற மேற்குறிப்பிட்ட உருப்படிகளை பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததால் மோசடி செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பல்கலைக்கழகமானது பொறுப்புடைய நபர்களிடமிருந்து கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், இந்த கொடுப்பனவுகள் நாட்குறிப்பு பதிவுகளால் புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகளின் தொங்கல் கணக்கு மீதான நட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் உள்ளக மற்றும் வெளிவாரி விசாரணைகள் செயற்பாட்டில் இருந்தன.

(ஆ) தாதியியல் பிரிவு ஒருங்கிணைப்பாளரால் ரூபா 104,220 பெறுமதியான மடிக்கணனியொன்று இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், பல்கலைக்கழகத்தால் நட்டங்களின் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்பட்டதுடன் சபை தீர்மானத்தின் அடிப்படையில் தொடர்புபட்ட உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 115,800 முழுமையான பதிலீட்டுக் கிரயத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2016 செப்தெம்பர் 30 வரையிலும் உத்தியோகத்தரிடமிருந்து நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சங்கீதப் பிரிவின் டிஜிற்றல் கற்கை காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த ரூபா 140,000 பெறுமதியான இரண்டு தனிப்பட்ட கணனிகள் 2014 ஏப்ரல் 28 இல் களவாடப்பட்டிருந்தன. இது தொடர்பில் ஆரம்ப விசாரணையை நடாத்துவதற்கு உப வேந்தரால் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்ப விசாரணைகளை நடாத்துவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விவசாய பீடத்திற்கு பல்கலைக்கழக மானிய நிதியேற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட பீடாதிபதியின் அலுவலகத்திற்குச் சொந்தமான ரூபா 98,700 பெறுமதியான பல்லூடகத் தெறிப்பான் 2015 பெப்ரவரி 13 அளவில் இரண்டாம் ஆண்டு விரிவுரை மண்டபத்திலிருந்து காணாமல் போயிருந்தது. இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 103 இன் பிரகாரம் விவசாய பீடாதிபதி நட்டம் தொடர்பில் ஒரு மாதத்திற்குள் அறிக்கையிடத் தவறியிருந்தார். 2015 ஆகஸ்ட் 08 இல் ஆரம்ப விசாரணைக்காக சபையால் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 செப்தெம்பர் 30 வரை நட்டத்தை அறவிடுவதற்கு பல்கலைக்கழகத்தால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) விஞ்ஞான பீடத்தில் 2015/08/07 இல் பல்லூடகத் தெறிப்பானின் இழப்பு இடம்பெற்றிருந்தது. இது தொடர்பில் நட்டத்தை அறவிடுவதற்கு பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மருத்துவ பீட பீடாதிபதி அலுவலகத்திற்குச் சொந்தமான துவிச்சக்கர வண்டியொன்று துவிச்சக்கர வண்டி நிறுத்துமிடத்தில் 2014 நவம்பர் 04 இல் இழக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 105 இன் பிரகாரம் பல்கலைக்கழகத்தால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகமானது 2015 திசெம்பர் 31 அளவில் நிலவிய 148 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஏழு பீடங்களில் பேராசிரியர், இணைந்த பேராசிரியர் பதவி போன்ற பிரதான கல்விசார் பதவிகளில் 117 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் பல்கலைக்கழகமானது அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களிற்கான தாபனவிதிக் கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம், பல ஆண்டுகளாக பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட 683 பதவியணி உத்தியோகத்தர்களின் கல்விசார் தகைமைகளின் சான்றுபடுத்தல்கள் உரிய நிறுவகங்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முப்பது பயிற்சிபெறும் முகாமைத்துவ உதவியாளர்கள் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா பதவியணியின் நிரந்தர பதவிகளின் கடமைகளிற்காக வேலைக்கமர்த்தப்பட்டிருந்த போதிலும் கல்விசாரா பதவியணியின் நிரந்தரப் பதவிகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துவிச்சக்கர வண்டிகள், யூபிஎஸ் மற்றும் விரிவுரை மண்டப கதிரைகள் மற்றும் சுழல் கதிரைகள் போன்ற 131 உருப்படிகளில் பற்றாக்குறைகளும் மாக்றோ வேவ்ஸ், வாசிப்பு மேசைகள், யூபிஎஸ், கணனிகள் மற்றும் கணனி கதிரைகள் போன்ற 60 உருப்படிகளில் மேலதிகங்களும் 2014 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்புச் சபையால் அறிக்கையிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் கணக்கெடுப்புச் சபையால் அறிக்கையிடப்பட்டமைக்கு அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொறியியல் பீட கணனி பிரிவின் பாவனைக்காக குறைந்த தரத்தில் பல்கலைக்கழகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 257,600 பெறுமதியான ஐம்பது கதிரைகள் பாவனைக்குட்படுத்த முடியாத நிலைமையிலுள்ளன. இருந்தபோதிலும், கணக்கெடுப்புச் சபை அவர்களுடைய அறிக்கையில் அப் பொருட்களை அறிக்கையிடத் தவறியிருந்தது. மேலும், பாவனைக்குட்படுத்த முடியாத கதிரைகளை பதிலீடு செய்வதற்கு பல்கலைக்கழகம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

**4.8 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனைத்துப் பதவியணியினரும் கைவிரல் அடையாள ஸ்கானரில் தங்களது உள்வருகைகள் மற்றும் வெளிச்செல்லல்களை பதிவுசெய்ய வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்கள் கைவிரல் அடையாள ஸ்கானரில் தங்களது உள்வருகைகள்

மற்றும் வெளிச்செல்லல்களை பதிவுசெய்வதற்கு மறுத்திருந்தனர். இது தொடர்பில் 2014 ஆகஸ்ட் 22 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவில் பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் விதிகள் மற்றும் பிரமாணங்களை பின்பற்ற வேண்டுமென நெறிப்படுத்தப்பட்டதுடன் அதற்கிணங்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரும் நெறிப்படுத்தப்பட்டார்கள். எவ்வாறாயினும், இந்த நெறிப்படுத்தல் இன்றுவரை பல்கலைக்கழகத்தால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட அநேகமான விடுமுறைகள் பொறுப்பான உத்தியோகத்தர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததால் விடுமுறைகள் தொடர்பில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களிற்கான தாபனவிதிக் கோவையின் X ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு பல்கலைக்கழகம் தவறியிருந்தது. மேலும், பொருத்தமான பதில்கடமை ஒழுங்குகளின்றி உத்தியோகத்தர்கள் விடுமுறை எடுத்திருந்ததுடன் ஏனைய பதவியணியினரால் அத்தகைய அவசர வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட 2010 பெப்ரவரி 15 ஆம் திகதிய 02/2010 ஆம் இலக்க தாபனங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 779,520 பெறுமதியான பன்னிரண்டு கைவிரல் அடையாள ஸ்கானர்கள் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் ஆக்கபூர்வமாக பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**4.9 கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமை**

---

மீளாய்வாண்டின் போது அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், கட்டிடங்கள், புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள், மேலங்கிகள், தொலைபேசி பரிவர்த்தனைகள் மற்றும் காகிதாதிகள் என்பவற்றின் கொள்வனவிற்காக ரூபா 921,180,776 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு கைநூலின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், விபரமான கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2.1 (ஆ) பிரிவின் பிரகாரம், ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகள் காலப்பகுதிக்காக கற்பனையான கொள்வனவு நடவடிக்கைகள் பிரதான கொள்வனவு திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகமானது மீளாய்வாண்டிற்கான கொள்வனவு நடவடிக்கைகளை மாத்திரம் பட்டியலிட்டிருந்தது.

(இ) பிரதான கொள்வனவு திட்டத்தில் 07 ஆம் இலக்கம் தொடக்கம் 13 ஆம் இலக்கம் வரை குறிப்பிடப்பட்ட விடயங்களிற்கான இலக்கிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதான கொள்வனவு திட்டம் உயர் கல்வி அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம், காலவரிசை முறை, ஆரம்பித்தல் புள்ளியிலிருந்து அதன் பூர்த்தியாக்கல் வரை ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கையின் படிமுறைகள் என்பவற்றின் விபரிப்பதன் மூலம் கொள்வனவு நேரப் பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கால அட்டவணை மற்றும் ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கையின் படிமுறைகள் என்பன பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.10 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.10.1 விளைவற்ற சொத்துக்கள்

ரூபா 361,850 பெறுமதியான மெழுகுதிரிகள், கற்லொக் அட்டைகள் மற்றும் மை பொதியுறைகள் போன்ற நுகர்வு மற்றும் பராமரிப்பு பொருட்கள் 01 தொடக்கம் 15 ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் பயன்படுத்தப்படாது இருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் அவற்றைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.10.2 வாகனங்களின் முகாமைத்துவம்

வாகனங்களின் பராமரிப்புத் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- எரிபொருள் கட்டளை இலக்கம், திகதிகள் மற்றும் எரிபொருள் சிட்டை இலக்கங்கள் என்பன வாகன ஓட்ட அட்டவணைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.
- பிரயாணங்களின் நோக்கம் வாகன ஓட்ட அட்டவணைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.
- வாகனங்களின் சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
- உத்தியோகத்தர்கள் 4,260 கிலோமீற்றர் பிரயாணத்திற்காக வாகனங்களை பயன்படுத்திய பின்னர் ஓட்ட அட்டவணைகளில் கையொப்பமிடுவதற்குத் தவறியிருந்தனர்.
- வாகன அசைவுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் 2016 செப்தெம்பர் 31 வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பல்கலைக்கழகம் 2010 மார்ச் 10 ஆம் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையையும் தயாரித்திருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

கொடுக்கல்வாங்கல்களின் பின்வரும் பரப்புக்கள் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தால் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

(அ) வாகன விபத்துக்கள்

(ஆ) சொத்துக்களின் இழப்பு

(இ) தனிநபர் கோவைகளில் உள்ளடங்கியுள்ள ஆவணங்கள்

**5.4 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

-----------------------------------------------------------------------------

பல்கலைக்கழகமானது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட 11 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

-----------------------------------

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.